# Copy of Deposition

சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்

அசல் வழக்கு எண்.107/2024

The Oaths Act 1969, Act No.44/1969 விதிமுறைகளின்படி 12.08.2025ம் நாளாகிய இன்று **திருமதி.P.ஸ்ரீதேவி.,எல்.எல்.எம்.,** அவர்களால் சாட்சியம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கோபி | தொழில் | : | |
| த/பெ.பெயர் | : | | கிராமம் | : | |
| வயது | : | | மாவட்டம் | : | |

**வா.சா: 2 முதல் விசாரணை**

நான் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன்.

நான் வெள்ளியனை காட்டூரில் குடியிருந்து வருகிறேன் எனது தொழில் விவசாயம் செய்து வருகிறேன். வாதிகள் பாஸ்கரன், வேலுச்சாமி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பக்கத்து ஊர்க்காரர்கள். பிரதிவாதி சாரதாம்பாளை தெரியுமா என்றால் தெரியும், கொடுமுடியை சேர்ந்தவர். வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் என்ன எழுதிக்கொண்டார்கள் என்றால் 06.03.2017ம் தேதி அன்று ஒப்பந்தத்திற்கான கால நீட்டிப்பு பத்திரம் எழுதிக்கொண்டார்கள். அதில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ.4 ஆவணம் மேற்படி கால நீட்டிப்பு ஒப்பந்தமா என்றால் ஆமாம். அதில் முதலாவதாக சாட்சி கையொப்பம் செய்துள்ளேன். என்னுடன் சாட்சி கையொப்பம் செய்த மற்றொரு நபர் குளத்துப்பாளையத்தை சேர்ந்த சங்கர்கணேஷ் எனக்கு பழக்கமானவர். வா.த.சா.ஆ.4 ஆவணத்தில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் சங்கர்கணேஷ் உடையது. கால நீட்டிப்பு ஒப்பந்த பத்திரம் எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் கொடுமுடி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு எதிரே இராஜேந்திரன் என்ற பத்திர எழுத்தர் அலுவலகத்தில் வைத்து எழுதப்பட்டது. வா.த.சா.ஆ.4 ஆவணத்தை பிரதிவாதி சாரதாம்பாள் சொல்லி இராஜேந்திரன் எழுதினார். வா.த.சா.ஆ.4 ஆவணத்தில் உள்ள வாசகங்களை யார் சொன்னது



P SRIDEVI

Digitally signed by P SRIDEVI
Date: 2025.08.12 18:32:01 +0200

என்றால் சாரதாம்பாள் சொல்லி இராஜேந்திரன் எழுதினார். கால நீட்டிப்பு ஒப்பந்த பத்திரம் வா.த.சா.ஆ.4 ல் சாரதாம்பாள் கையொப்பம் செய்துள்ளாரா என்றால் ஆமாம். அந்த தேதியில் பண பரிவர்த்தனை எதாவது ஏற்பட்டதா என்றால் பாஸ்கரன் மற்றும் வேலுச்சாமி ரூ.2,00,000/− த்தை சாரதாம்பாளுக்கு கொடுத்தார். இவ்வாறு பணம் கொடுக்கப்பட்டது என வா.த.சா.ஆ.4 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. ரூ.2,00,000/− பணம் எதற்காக வாதிகளுக்கு பிரதிவாதியால் கொடுக்கப்பட்டது என்று மேற்படி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சொன்ன தேதியில் கிரையம் செய்து கொள்ள முடியவில்லை என்பதால் வேறு ஒருவரிடம் அசல் ஆவணங்கள் உள்ளது என்பதால் மேற்படி தொகையை கால நீட்டிப்புக்காக கொடுத்தார். சாரதாம்பாள் வா.த.சா.ஆ.4 ஆவணத்தில் கையொப்பம் செய்ததை நேரில் பார்த்தேனா என்றால் பார்த்தேன். நானும், மற்றொரு சாட்சியும் கையொப்பம் செய்வதை சாரதாம்பாள் பார்த்தாரா என்றால் பார்த்தார்.

குறுக்கு விசாரணை:− (பிரதிவாதி தரப்பில்)

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 9ம் வகுப்பு வரை படித்துள்ளேன். 9ம் வகுப்பில் ஆங்கில தேர்வு எந்த தேதியில் நடந்தது என்று ஞாபகம் உள்ளதா என்றால் இல்லை. எனது முதல் விசாரணையில் வா.த.சா.ஆ.4 ஆவணத்தின் தேதியை எவ்வாறு ஞாபகம் வைத்து சொன்னேன் என்றால் எனக்கு சார்வு செய்யப்பட்ட நீதிமன்ற அழைப்பாணையில் அந்த தேதி குறிப்பிடப்பட்டிருந்தது. எந்த வழக்கறிஞர் எனக்கு அழைப்பாணை அனுப்பி சாட்சியம் அளிக்க அழைத்திருக்கிறார் என்று தெரிந்து கொண்டேனா என்றால் தற்போது வரை தெரியாது. என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ.1 மற்றும் பி.வா.த.சா.ஆ.1 ஆவணங்களை பொறுத்து பேச்சு வார்த்தை இருந்ததா என்றால் ஆமாம், இந்த ஆவணங்களை பொறுத்துதான் பேசினார்கள். இந்த ஆவணங்களை பார்த்தபோது பாஸ்கரன் வகையறா சாரதாம்பாளிடம் ஒப்பந்தம் போட்டிருந்தார்கள் என்று தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். வா.த.சா.ஆ.4 இரசீது எழுதிய சமயத்தில் ஒப்பந்தம் எழுதிய போதே வில்லங்கம் செய்யப்பட்டிருந்ததா அல்லது அதன் பின்னிட்டு இரசீது தேதிக்கு முன்பு வில்லங்கம் செய்யப்பட்டிருந்ததா என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. இது



P SRIDEVI
Digitally signed by P SRIDEVI
Date: 2025.08.12 18:32:09 +0200

போன்று இரசீதுகளில் இதற்கு முன்பு நான் சாட்சி கையொப்பம் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. வா.த.சா.ஆ.4 இரசீது எழுதிய காலத்தில் யாருடன், எங்கு குடியிருந்தார் என்று தெரியுமா என்றால் தெரியும். சாரதாம்பாள் அவரது கணவர் மற்றும் இரண்டு உரிய வயதடைந்த மகன்களுடன் குடியிருந்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். வா.த.சா.ஆ.4 ஆவணம் ஏற்படுத்தப்பட்டபோது சாரதாம்பாளின் கணவர் மற்றும் இரண்டு மகன்கள் வந்திருந்தார்களா என்றால் இல்லை. என்னை சாட்சி கையொப்பம் செய்ய முதலில் அழைத்தது யார் என்றால் சாரதாம்பாளின் கணவர் சோமசுந்தரம் மற்றும் சாரதாம்பாள். அதற்கு முன்பு வாதிகள் பாஸ்கரன், வேலுச்சாமியை தெரியுமா என்றால் 15 வருடங்களாக தெரியும். வா.த.சா.ஆ.4 இரசீது எழுதுவதற்கு எத்தனை நாட்களுக்கு முன்பு சோமசுந்தரம் என்னிடம் சொன்னார் என்றால் முதல்நாள்தான் சொன்னார். அன்று எது சம்பந்தமாக யார் யாருக்கு இடையேயான பரிவர்த்தனை என்று சொன்னாரா என்றால் அவர் சொன்னதால் தெரியும். பாஸ்கரன், வேலுச்சாமியும் சாரதாம்பாள் பூமியை விலைக்கு வாங்குவதற்கு கிரைய ஒப்பந்தங்கள் செய்து கொண்டார்கள் என்று தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். வாதிகள் மற்றும் பிரதிவாதி சட்ட அறிவிப்புகள் வா.த.சா.ஆ.2, 5 மற்றும் 6 அனுப்பிக்கொண்ட விவரம் அன்றைய தேதியில் எனக்கு தெரியுமா என்றால் சோமசுந்தரம் சொல்லி தெரியும். சோமசுந்தரம் சொல்லியதற்கு பிறகு வா.த.சா.ஆ.4 ல் கையொப்பம் செய்வதற்கு முன்பு பாஸ்கரன், வேலுச்சாமி என்னை பார்த்தார்களா என்றால் பார்க்கவில்லை. கையொப்பம் செய்த அன்று பாஸ்கரனும், வேலுச்சாமிக்கு சாரதாம்பாள் தனது சொத்தை விற்க ஒப்பந்தம் செய்திருந்தார்கள் என்றும், சாரதாம்பாள் சொத்தில் வில்லங்கம் செய்து விட்டார் என்றும் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். வில்லங்கம் செய்ததை சாரதாம்பாள் தானாக முன்வந்து வாதிகளிடம் சொன்னாரா என்றால் என் முன்னிலையில் சொல்லவில்லை. எவ்வளவு ரூபாய்க்கு வில்லங்கம் செய்திருந்தார்கள் என்று நானோ, வாதிகளோ தெரிந்து கொண்டோமா என்றால் தெரியாது. வில்லங்கத்தை தீர்ப்பதற்குதான் ரூ.2,00,000/- பணத்தை வாதிகள் கொடுத்தார்களா என்றால் எனக்கு சரியாக தெரியாது. அன்றைய தேதியில் பாஸ்கரன் மற்றும் வேலுச்சாமியும் தான் சாரதாம்பாளிடம் வில்லங்கத்தை



P SRIDEVI Digitally signed by P SRIDEVI Date: 2025.08.12 18:32:15 +0200

தீர்க்க கேட்டிருக்க வேண்டும் சாரதாம்பாள் சென்று வாதிகளிடம் கேட்டிருக்க வேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. இரசீது போட்டஅன்று மூலப்பத்திரத்தை கொடுத்து கடன் வாங்கப்பட்டதா அல்லது கடன் வாங்குவதற்காக மூலப்பத்திரம் கொடுக்கப்பட்டதா என்று தெரிந்து கொண்டேனா என்றால் எனக்கு தெரியாது. இது சம்பந்தமாக வாசகங்கள் எதுவும் வா.த.சா.ஆ.4 ஆவணத்தில் எழுதப்படவில்லை என்றால் சரிதான். ரூ.2,00,000/- எத்தனை தாள்களாக கொடுத்தார்கள் என்றால் ரூ.500/- தாளாக 4 கட்டுக்கள் கொடுத்தார்கள், சோமசுந்தரம், சாரதாம்பாள் இருவரும் எண்ணிப்பார்த்தார்கள், நான் எண்ணிப்பார்க்கவில்லை. அந்த காலத்திலேயே சாரதாம்பாளுக்கு கண் பார்வை குறைவு, காது மந்தம் என்றால் தெரியாது. சாட்சி தற்போது சோமசுந்தரம் உடன் இருந்ததாக கூறுகிறார். சோமசுந்தரத்தை வா.த.சா.ஆ.4 ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்ய கூறினேனா என்றால் இல்லை. வாதிகளாவது கணவரான சோமசுந்தரத்தை சாட்சி கையொப்பம் செய்யச்சொன்னார்களா என்றால் இல்லை. இரசீதுகளில் கையொப்பம் செய்தால் முத்திரைத்தாள் ஒட்ட வேண்டும் என்று தெரியுமா என்றால் தெரியாது ஆனால் முத்திரைத்தாள் ஒட்டப்பட்டிருந்தது. என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ.4 ஆவணத்தில் கடைசி வரியில் 08.09.2016ம் தேதி அன்று கிரைய உடன் படிக்கையின் பாதுகாப்பு கருதி தங்களிடம் நான் பெற்றுக்கொண்டிருந்த கையெழுத்து தாள்களை கிரைய தேதியில் தவறாமல் ஒப்புவிக்கிறேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், அதைப்பற்றி நான் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். நான் பாஸ்கரன் மற்றும் வேலுச்சாமியின் கையாள் என்றாலும் தற்போது வழக்கிற்காக சாரதாம்பாள் கணவர் அழைத்ததால்தான் சாட்சி கையொப்பம் இட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.4 இரசீதில் உள்ளது சாரதாம்பாள் கையொப்பம் இல்லை என்றாலும், சாரதாம்பாள் கையொப்பம் செய்ததாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வசிக்கும் இடத்திற்கும் சாரதாம்பாள் வசிக்கும் இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 4 அல்லது 5 கிமீ தூரம் இருக்கும். மற்றொரு சாட்சி சங்கர்கணேஷ் வசித்த குளத்துப்புதூர் பாளையத்திற்கும் எனது ஊருக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 3 கி.மீ தூரம்



P SRIDEVI
Digitally signed by P SRIDEVI
Date: 2025.08.12 18:32:21 +0200

## Copy of Deposition

இருக்கும். எத்தனை வருடங்களாக சங்கர்கணேஷ் எனக்கு தெரியும் என்றால் 10,12 வருடங்களாக தெரியும். சங்கர்கணேஷை யார் அழைத்தார்கள் என்று தெரிந்து கொண்டேனா என்றால் தெரியாது. பிரதிவாதியிடம் ரூ.2,00,000/- ரொக்கமாக பணம் கொடுத்ததாக வாதிகள் சொல்லி நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற அழைப்பாணை வந்த தேதி தெரியுமா என்றால் 08.07.2025. சாட்சி சங்கர்கணேஷ் தற்போது உயிருடன் உள்ளாரா என்றால் இல்லை. பத்திர எழுத்தர் தற்போது உயிருடன் உள்ளாரா என்றால் இல்லை. பத்திர எழுத்தர் இராஜேந்திரனை எனக்கு எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் பத்திர எழுத்தர் அலுவலத்திற்கு சென்றது அதுதான் முதல் தடவை. நான் பத்திர எழுத்தர் அலுவலகத்திற்கு சென்றபோது வாதிகள் அங்கிருந்தார்கள என்றால் அங்கிருந்தார்கள்.

| |
|---|
| Taken down me in Open Court read over to the witness and acknowledge by |
| Interpreted<br>Him / Her To Be Correct<br>P SRIDEVI Digitally signed by P SRIDEVI Date: 2025.08.12 18:32:28 +0200<br>Subordinate Judge,<br>Kodumudi |